## தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று,

# ‘கலைஞர் நினைவு நாணயம்’ வெளியிட ஒன்றிய அரசு அனுமதி!

புதுடெல்லி,ஜூலை.12-

தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று, கலைஞர் நினைவு நாணயம் வெளியிட ஒன்றிய அரசு அனுமதி வழங்கியது. ‘முத்தமிழ் அறிஞர் கலைஞர் டாக்டர் எம்.கருணாநிதி’ என்ற பெயரில் ஒரு நினைவு நாணயம் வெளியிட தமிழ்நாடு அரசு திட்டமிட்டது. இதற்காக, ரூ.100 மதிப்பில் நினைவு நாணயம்வெளியிடும்படி மத்திய நிதியமைச்சகத்திடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசு சார்பில் கடந்த வருடம் கோரப்பட்டிருந்தது.

இந்நாணயத்தை, கடந்த ஜூன் 3ல் முடிந்த கலைஞர் அவர்களின் நூறாவது பிறந்தநாளில் வெளியிடத் திட்டமிடப்பட்டிருந்தது. பல்வேறு காரணங்களால் இந்த நாணயம் குறிப்பிட்ட தேதியில் வெளியிட முடியாமல் இருந்தது. இதன் பின்னணியில் நாணயத்திற்கான நடைமுறைகள் முடிவடையாதது காரணமானது. தற்போது இவை அனைத்தும் முடிந்து நேற்று முன்தினம் நாணயத்திற்கான அனுமதியில் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கையொப்பம் இட்டதாகத் தெரிகிறது.

தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று, முன்னாள் முதலமைச்சர் ‘முத்தமிழ் அறிஞர் கலைஞர்



டாக்டர் மு.கருணாநிதி என்ற பெயரில் நினைவு நாணயம் வெளியிட ஒன்றிய அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஆங்கிலம் மற்றும் இந்தியில் அவரின் பெயருடன் ‘தமிழ் வெல்லும்’ என்ற வாசகம் இடம் பெற உள்ளது. இதற்கான உத்தரவு விரைவில் ஒன்றிய அரசின் கெஜட்டில் வெளியாக உள்ளது. இதற்கான மாதிரி வடிவத்தை தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.



சென்னை – தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (10.07.2024) நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களிடம் மதுரை மாவட்டத்தில் கிரானைட் குவாரிகளில் நடைபெற்ற வீதிமீறல்கள் தொடர்பாக ஓய்வு பெற்ற நீதியரசர் முனைவர் ப. ஜோதிமணி அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட புவியியல் மற்றும் சுரங்கத்துறை நிபுணர்களை உறுப்பினர்களாகக் கொண்ட உயர் மட்ட சிறப்புக்குழு தனது அறிக்கையினை வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது, இயற்கை வளங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணிந்திர ரெட்டி, புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையர் எ.சரவணவேல்ராஜ், இந்திய புவியியல் ஆய்வுக் கழக கூடுதல் பொது இயக்குநர் (ஓய்வு) பாஸ்கரன், புவியியல் மற்றும் சுரங்கத்துறை கூடுதல் இயக்குநர் (ஓய்வு) சு.சுதர்சனம் ஆகியோர் உடனிருந்தனர்.

## மதுரை மாவட்டத்தில்

# 83 கிரானைட் குவாரிகளில் விதிமீறல்கள் தொடர்பான அறிக்கை!

### நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகனிடம் – நீதியரசர் (ஓய்வு) முனைவர் ப.ஜோதிமணி வழங்கினார் !

**சென்னை, ஜூலை 12-**

**ஓய்வு பெற்ற நீதியரசர் முனைவர் ப.ஜோதிமணி அவர்கள் தலைமையிலான குழு, மதுரை மாவட்டத்தில் 83 கிரானைட் குவாரிகளில் நடைபெற்ற விதிமீறல்கள் தொடர்பான அறிக்கையினை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களிடம், நேற்று முன்தினம் அளித்தது.**

அதன் விவரம் வருமாறு:

மதுரை மாவட்டத்தில் கிரானைட் குவாரிகளில் நடைபெற்ற விதிமீறல்கள் குறித்து ஆராய்ந்த குழுக்கள் தனது அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தது.

அந்த அறிக்கைகளை ஆராய்ந்து அரசுக்கு தக்க பரிந்துரை செய்வதற்காக ஓய்வு பெற்ற நீதியரசர் முனைவர் ப.ஜோதிமணி அவர்களின் தலைமையில், பாஸ்கரன், கூடுதல் பொது இயக்குநர் (ஓய்வு) இந்திய புவியியல் ஆய்வுக் கழகம் மற்றும் சு.சுதர்சனம், கூடுதல் இயக்குநர் (ஓய்வு), புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆகியோர்களை நிபுணர் உறுப்பினர்களாகக் கொண்ட உயர் மட்ட சிறப்புக் குழு கடந்த 20.02.2023 அன்று அமைக்கப்பட்டது.

நீதியரசர் தலைமையிலான இக்குழு மதுரை மாவட்டத்தில் 83 கிரானைட் குவாரிகளில் நடைபெற்ற விதிமீறல்கள் தொடர்பான தனது அறிக்கையினை நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களிடம் நேற்று முன்தினம் (10.07.2024) தலைமைச் செயலகத்தில் அளித்தது.

அப்போது இயற்கை வளங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் (கூடுதல் பொறுப்பு) க.பணீந்திர ரெட்டி மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் எ.சரவண வேல்ராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.

## கள்ளக்குறிச்சி விவகாரத்தில் பிரதான எதிர்க்கட்சியின்

# உரை எதுவும் சட்டமன்றத்தில் பதிவாகவில்லை என்பது வருத்தம் அளிக்கிறது!

### சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு – புதுக்கோட்டையில் பேட்டி!

புதுக்கோட்டை, ஜூலை 12-

தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் ரகுபதியின் இல்ல திருமண விழா கடந்த 7ம் தேதி நடைபெற்ற நிலையில் அந்த நிகழ்ச்சியில் பங்கேற்க முடியாததால் மணமக்களை சந்திக்க வந்த தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு புதுக்கோட்டை ரோஜா இல்லம் என்ற விருந்தினர் மாளிகையில் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறுகையில்:-

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் எல்லா வழிபாட்டுத் தலங்களிலும் அவரவர்கள் இஷ்டப்படி செல்கிறார்கள், அது போன்று பாதுகாப்பு உள்ள மாநிலம் தமிழ்நாடு, இந்தியாவிலேயே பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு தான் என்று கூறி உலக அளவில் செஸ் ஒலிம்பியாட் மாமல்லபுரத்தில் தான் நடைபெற்றது, இந்தியாவில் 14வது தொழில்துறையில் இருந்த மாநிலம் இரண்டாவது இடத்திற்கு வந்துள்ளது.

உலக முதலீட்டாளர்கள் எந்த மாநிலத்தில் தொழில் முதலீடு செய்யலாம் என்று



சொன்னால் அதற்கு சட்டம் ஒழுங்கு பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு என்று கூறி அதிகப்படியானோர் வந்து கொண்டு உள்ளனர் அது அனைவருக்கும் தெரியும், இதற்குப் பிறகு சட்டம் ஒழுங்கு பாதிப்பு என்று கூறினால் என்ன சொல்வது என்று தெரியவில்லை.

அனைவருக்கும் பாதுகாப்பு கொடுக்கக்கூடிய மாநிலம் தான் தமிழ்நாடு. தனிப்பட்ட முறையில் நடக்கும் பிரச்சினைகளுக்கு இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறுகிறது. சட்டமன்றத்தில் கடந்தாண்டு எவ்வளவு சம்பவங்கள் நடைபெற்றது இந்த ஆண்டு எவ்வளவு சம்பவங்கள் நடைபெற்றுள்ளது என்ற புள்ளி விவரங்களோடு எடுத்துரைக்கப்பட்டது.

ஒரு அரசின் மீது குற்றச்சாட்டு எப்போது சொல்ல வேண்டும் என்றால் ஒரு குற்ற சம்பவம் நடைபெற்று நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் தான் சொல்ல வேண்டும். ஆனால் இந்த அரசு சம்பவம் நடைபெற்ற அடுத்த நிமிடமே நடவடிக்கை எடுத்து யாராக இருந்தாலும் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து சரியான நடவடிக்கை எடுத்து நீதிமன்றம் முன்பு நிறுத்துகிறார்கள்.

காவல்துறை அவர்களால் முடிந்தவற்றை செய்து வருகின்றனர். நாமும் அவர்களுக்கு ஒத்துழைப்பு முடிந்த அளவு கொடுக்க வேண்டும். பல இடங்களில் ஒத்துழைப்பு குறையும் போது வழக்கை கண்டுபிடிப்பதில் தாமதம் ஏற்படுகிறது. இன்று பத்திரிகையாளர்கள் பாதுகாப்பாக உள்ளனர் நாம் அனைவரும் பாதுகாப்பாக இருக்கிறோம். நானும் பாதுகாப்பாக தான் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திலிருந்து வருகிறேன். இதற்கு மேல் என்ன பாதுகாப்பு வேண்டும். தனிப்பட்ட முறையில் நடைபெறும் சம்பவங்களை நாம் பெரிது படுத்தக் கூடாது.

எதிர்க்கட்சியினர் சட்டமன்றத்தில் அமர்ந்து பேச வேண்டும். கள்ளக்குறிச்சி விவகாரம் என்று கூறுகின்றனர் பிரதான எதிர்க்கட்சியின் பேச்சு ஒன்று கூட சட்டமன்றத்தில் பதிவாகவில்லை என்பது வருத்தம் அளிக்கிறது.

சட்டமன்றம் என்றால் அதற்கு ஒரு விதிமுறை உள்ளது. இந்திய அரசியல் சட்டப்படி பேரவை விதிப்படி இதுதான் சட்டமன்றம் கூடும். காலையில் கேள்வி நேரம் கேள்வி நேரத்திற்கு முன்பாகவே வெளியே செல்ல வேண்டும் என்று தகராறு செய்தால் நாம் என்ன செய்ய முடியும்.

ஜனநாயகத்தின் நான்காவது தூண் சரியாக இருந்தால் அனைத்தும் சரியாக இருக்கும். நடக்கும் குற்ற சம்பவங்களை காவல்துறையினரிடம் ஊடகத்துறையினர் கொண்டு சென்று சேர்த்தால் சரியாக நடக்கும். நான்காவது தூண் சரியாக இருந்தால் நாடே சரியாக இருக்கும். அதற்காக நான் நீங்கள் சரியாக இல்லை என்று கூறவில்லை என்று சட்டப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு தெரிவித்தார்.

## பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நிகழ்ச்சி!

# 100% தேர்ச்சி பெற்ற தனியார் பள்ளிகளுக்குப் பாராட்டு விழா!

### இளைஞர் நலன் - விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பரிசுகள் வழங்குகிறார்!

**சென்னை, ஜூலை 12-**

**100% தேர்ச்சி பெற்ற தனியார் பள்ளிகளுக்கு பாராட்டு மற்றும் விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பாராட்டு விழா 4.8.2024 அன்று நடைபெற உள்ளது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பிக்கிறார்கள்.**

இது தொடர்பாக, பள்ளிக் கல்வித்துறையின், தனியார் பள்ளிகள் இயக்ககம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

2023-2024ஆம்கல்வியாண்டில் நடைபெற்ற பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் 2199 தனியார் மெட்ரிகுலேசன் உயர்நிலைப் பள்ளிகளும், பன்னிரண்டாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் 1750 தனியார்மெட்ரிகுலேசன்மேல்நிலைப் பள்ளிகளும் 100% தேர்ச்சி பெற்றுள்ளன. மேலும், தனியார்



பள்ளிகளைச் சார்ந்த 78 LDIT600T6J/ மாணவியர்கள் சர்வதேச அளவிலும், 255 மாணவ/ மாணவியர் தேசிய அளவிலும், 1579 மாணவ/ மாணவியர் மாநில அளவிலும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு பதக்கங்களை வென்றுள்ளனர்.

மேற்கண்டவாறு 100% தேர்ச்சி பெற்ற பள்ளி நிர்வாகிகள், பள்ளி முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்களைப் பாராட்டி ஊக்குவிக்கவும், சர்வதேச/ தேசிய/ மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்களை வென்ற மாணவ/மாணவியரைமென்மேலும் ஊக்கப்படுத்தும் வகையிலும் தமிழ்நாடு அரசு சார்பில் முதன்முறையாக 04.08.2024 அன்று சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கில் மாண்புமிகு இளைஞர்நலன்மற்றும்விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையிலும் பாராட்டு விழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் 100% தேர்ச்சி பெற்ற பள்ளிகளுக்கும் சர்வதேச/ தேசிய/ மாநில அளவில் பதக்கங்களை வென்ற மாணவ/ மாணவியர்களுக்கும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் பாராட்டுச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பிக்க உள்ளார்கள்.

இவ்வாறு - தனியார் பள்ளிகள் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

## ஆசிரியர்களுக்கு கையடக்கக் கணினி வழங்கும் நிகழ்ச்சி!

# மாணவர்களை நண்பர்களாகக் கருதும் காலம் வந்துவிட்டது!

### கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

தூத்துக்குடி, ஜூலை 12–

தூத்துக்குடி ஜின் பேக்டரி ரோட்டில் உள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில், தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கான கையடக்க கணினி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், சிறப்பு அழைப்பாளராக தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கலந்து கொண்டு, 46 ஆசிரியர்களுக்குக் கையடக்க கணினி வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்வில், தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளரும், சமூக நலன் – மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதா ஜீவன், தூத்துக்குடி மாவட்டம் முதன்மை கல்வி அலுவலர் ரெஜினா, வட்டார கல்வி அலுவலர் சரஸ்வதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வில் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பேசியது:

எதிர்காலத்தின் மீது நம்பிக்கை தரக்கூடிய நிகழ்ச்சியாக இந்த நிகழ்வு இருக்கிறது. இன்றைக்கு மாறிக்கொண்டிருக்கின்ற உலகத்தில் நமது கைப்பேசி, ஒரு கணினியாக மாறிக்கொண்டு இருக்கிறது. தந்தை பெரியார் அவர்கள் சென்னையில் அண்ணா பல்கலைக்கழகத்தில் கணினி வந்த பொழுது, அதை பார்க்கவேண்டும் என்று தள்ளாத வயதிலும் சென்று அந்த கணினியைப் பார்த்தார். முதலாவதாக இருந்த கணினி மிகவும் பெரியதாக இருந்தது, பிறகு சிறிதாகி சிறுதாகி தற்போது கைப்பேசி ஒரு கணினியாகத் தான் இருக்கிறது. இந்த மாறுதலை ஆசிரியர்களும் உள்வாங்கிக் கொண்டு மாணவர்களுக்கு அதைச் சொல்லித் தர வேண்டும்.

நம்மை விட நமது பிள்ளைகள் அடுத்த தலைமுறையைச் சார்ந்தவர்கள், நமக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால் கூட அவர்கள் சொல்லிக் கொடுக்கிறார்கள். இப்போதுள்ள மாணவர்கள் தொழில்நுட்பத்தோடு பிறந்தவர்கள் அவர்களைத் தூக்கத்தில் எழுப்பிக் கேட்டால் கூட உங்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் அளவுக்கு அறிவு சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு தலைமுறையுடன் நாம் பழகிக் கொண்டிருக்கிறோம். மாணவமாணவியர் இப்படித்தான் இருக்க வேண்டும், அப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்று சொன்ன காலம் முடிந்துவிட்டது. அனைத்தையும் தாண்டி நாம் அவர்களுடன் நண்பர்களாகப் பழக வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம்.

இவ்வாறு அவர் பேசினார்.



திருச்சியில் தலைவர் கலைஞர் அவர்களின் 101வது பிறந்த நாளை முன்னிட்டு திருச்சி மேற்கு தொகுதிக்குட்பட்ட பீமநகர் மார்சிங்பேட்டை பகுதியில் வட்ட செயலாளர் மார்சிங் பேட்டை செல்வராஜ் ஏற்பாட்டில் அப்பகுதியில் உள்ள பள்ளி மாணவ, மாணவிகளுக்கு ஸ்கூல் பேக்,நோட்டுப் புத்தகம், ஏழை எளிய மக்களுக்கு வேஷ்டி, சேலைகளையும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே. என். நேரு வழங்கியதோடு தி.மு.க. கொடியை ஏற்றி வைத்து தலைவர் கலைஞர் அவர்களின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் மாநகர செயலாளர், மாநகர மேயர் அன்பழகன்,சேர்மன் துரைராஜ், மண்டல குழு தலைவர் துர்கா தேவி, மாமன்ற உறுப்பினர்கள் முத்து செல்வம், கலைச்செல்வி ஜெகநாதன், மண்டிசேகர், ராமதாஸ், வழக்கறிஞர் மணிவண்ண பாரதி, கலைச்செல்வி கருப்பையா, உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## சென்னையில் உள்ள 19 மண்டல உதவி ஆணையர் அலுவலகங்களில்

# பொது விநியோகத் திட்ட மக்கள் குறை தீர் முகாம்!

### உணவுப் பொருள் வழங்கல் - நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் நடைபெறுகிறது!

சென்னை, ஜூலை 12–

உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் – ஆணையாளர் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:–

பொது விநியோகத் திட்டத்தின் பயன்களை குடிமக்கள் எளிதில் பெறும் வகையில் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு வட்டத்திலும் மக்கள் குறைதீர் முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது.

அதன்படி, ஜூலை 2024 மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம் சென்னையில் உள்ள உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 19 மண்டல உதவி ஆணையர் அலுவலகங்களில் 13.07.2024 அன்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெறவுள்ளது. குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம், கைபேசி எண் பதிவு / மாற்றம் செய்தல் உள்ளிட்ட பொது விநியோகத் திட்டம் தொடர்பான சேவைகள் மேற்கொள்ளப்படும். மேலும், நியாய விலைக் கடைகளில் பொருள் பெற நேரில் வருகை தர இயலாத மூத்த குடிமக்கள் உள்ளிட்டோருக்கு அங்கீகாரச் சான்று வழங்கப்படும்.

மேலும், பொது விநியோகக் கடைகளின் செயல்பாடுகள், தனியார் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளில் குறைபாடுகள் குறித்த புகார்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை பொதுமக்கள் இம்முகாமில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சென்னையிலுள்ள 19 மண்டல அலுவலகப் பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இச்சேவையினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவ்வறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.